1588

1588
2-55

JUN 1955

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை--7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, வைகாசி ௬ 20—5—55 தளிர்-33

## மூர்த்தி-தலம்-தீர்த்தம் முறையே கொள்வோம்.

மக்கள் செய்யும் பணியைக் காமியப் பணி, நிட்காமியப் பணி என இரு கூறுகப் பிரிக்கலாம். முதலது பயன் கருதிச் செய்வது. பின்னது பயன் கருதா தியற்றுவது. நிட்காமியப் பணி புரிந்தோர் கடவுள் தன்மை பெற்றவராவர். அவர் செழுமையுற்று ஓங்கி வளர்ந்து கடவுள் நிலை யெய்துவர். அப் பெரியாரைக் கடவுளாகவும் வழிபடலாம். காமியப்பணி புரிவோர் பல துன்பங்கட்கு ஆளாகி வருந்துவர். அவர் தம் நிலை குலைந்து, கீழ்ப்பட்டுள்ள விலங்கு, புள் முதலிய அஃறிணைப் பொருள் நிலையினை அடையினும் அடைவர்.

நம் முன்னோர் உலகப் போக்கினை யுணர்ந்தே உலகத்தை நிட்காமியப் பணிவழி நிறுத்தப் பல முறைகளைக் கோலிச் சென்றனர். அவைகளுள் சிறந்தது தெய்வ வழிபாடு. காரணம் அருள் வடிவாக உள்ள கடவுள் பணிகளெல்லாம் கைம்மாறு கருதாதன. அவ்வியல்புடைய ஒன்றினை மக்கள் இடையறாது எண்ணுவாரானால் அதன் இயல்பு அவர்களிடைப் படியும்; நின்மலராவர்.

நிட்காமியப் பணி வளர்ச்சிக்கெனவே ஏற்பட்டவை தெய்வ வழிபாடுகள். நிட்காமியப் பணியை வளர்க்கும் தெய்வ வழிபாட்டை மூர்த்தி வழியாகவும், தல வழியாகவும், தீர்த்த வழியாகவும் நிகழ்த்தி வந்தனர் பெரியோர்.

கடவுள் நீக்கமற யாண்டும் நிறைந்து நிற்பவர். அவரை வழிபடுவதற்கு ஓரிடம் வகுக்கப் படுவதன் நோக்கம் என்னை? மக்கள் மனத்திடை நிட்காமியக் கருமத்தை—பணியை—பதியச் செய்ய வேண்டுமென்பதேயாம்.

மனிதர் எதனோடு பழகுகின்றார்களோ, எதனை அடிக்கடி எண்ணுகின்றனரோ அதனதன் வண்ணமாந் தன்மையர். மனிதர் தம் மனம் பாச காரணங்களில் தோயப் பெற்று, வஞ்சனை, பொறாமை, லோபம் முதலிய தீக் குண வடிவினராகி, தமது நிலையிழந்து விலங்கு நிலை அடைவதை வலியுறுத்தக் காட்சியளவை ஒன்றே போதும். எனவே, மனத்தைப் பாச காரணங்களில் தோய விடாது அன்பில் தோய விடுத்துக் காண்பனவும் கேட்பனவும் அன்பு மயமாகப் புலனாகவும், ஒலிக்கவும் செய்து கொள்ள வேண்டுமேல்—வழி ஆலயப்பணியும் வழிபாடுமேயாம்.

ஆலயப்பணி, வழிபாடு முதலியவைகளின் மூலம் வேறு தீய நினைவுகட்கு இடம் பெறாத மனம் ஆண்டவன் நினைவு ஒன்றற்கே இடம் பெறுகின்றமையால் மக்கள் பாவச் செயல்கட்கு ஆளாகாமல் புண்ணியச் செயல்கட்கே ஆளாகின்றனர். எனவே, தன் வினையறுக்கத் தலத்தையடைந்து தீவினை ஒழியத் தீர்த்தமாடி முத்திக்கு வித்தாம் மூர்த்தியைப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாறக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சயபோற்றி என்று வணங்கி உய்வோமாக!

—'மூர்த்தி'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள். | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | செய, வைகாசி, | தளிர் |
|---|---|---|
| 7 | 20-5-55 வெள்ளி. | 33 |


## அறநெறி

தோற்ற எளிமையும் பொருட் செறிவும் நிறைந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுதான் வான் புகழ் வள்ளுவரது அறவுரை ஆலயங்கள் எழுப்பப் பெற்றுள்ளன மனிதப் பண்பின் அடிப்படையில் தன்னலத்தினுக்காக மிருகப் பண்பினை அடையாது. போராட்டக் காலங்களிலும் "தான் ஒரு மனிதன்" என்பதனை எண்ணி உழைத்து மனப் பண்பின் உச்சியினை நழுவ விடாதிருப்பதே அறன் என்று தெய்வப் புலவர் கருதுகிறார். இக் கருத்துக்கு ஏற்ற முறையிலேயே பல இடங்களிலும் கருத்து வேறுபாட்டினால் போராட்டம் நிகழும்போதெல்லாம் தன்னைத்தான் உள்ளுக்குள்ளே திரும்பிப் பார்க்கவேண்டும் என வலியுறுத்துகின்றார்.

"இன்னா செய்தாரை
யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்."

என்னும் அருங் குறட்பாவினால் மனித வாழ்க்கை அமைதியுடன் நடைபெற, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைதான் இன்றியமையாதது என்னும் உயர்ந்த கருத்து வெளிப்படுகின்றது. தீமை செய்தோர்க்குத் தீமையையே திருப்பினால் அது அப்போது இன்பம் விளைவிப்பது போலத் தோற்றினாலும், பிறர் இன்பத்தினைக் கண்டு தான் இன்புறுதலே மனிதனின் பண்பல்லாமல் மாறுபட்டதன்று. பிறர் துன்பங் கண்டுழி இன்பமும் பிறர் இன்பங் கண்டுழித் துன்பமும் அடையின் அஃது மிருகத்தன்மையின் இயல்பாகும். எனவே, இன்னா செய்தாராயினும் அவருக்கு மறுபடியும் இன்னா செய்யின். "என் அம்மாதிரி செய்தோம்" என்னும் ஏக்கத்தினை நம் மனம் காலப் போக்கில் நமக்கு உண்டாக்கி விடும். மனத்தின்கண் மாசு புகுந்துவிடின்; அறவாழ்வின் குறிநிலை தவறிவிடும். இதனால்தான் "ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்" என்று நம்மை எச்சரிக்கை செய்யும் வள்ளுவனார், 'இன்னா செய்யார்க்கும் இனியவே, செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு' என்று ஒரு சிக்கலான கேள்வி கேட்டு மனத்தில் ஒரு பெரும் போராட்டத்தினுக்கு வழி கோலுகின்றார். தன் மனத்திற்குத் தாமே பதில் கூறக் கூடிய நியாய வழியை வலியுறுத்துகின்றார். தம் மனம் தம்மைக் கேள்வி கேட்டுக் கலங்க வைக்காத ஒரு நிலையினை ஒரு மனிதன் அடைந்தானானால் அந்நிலையிலேயே மன நிறைவு, மன அமைதி, சான்றாண்மை தோன்றும் என்று கூறவேண்டும்.

மேற்கூறிய சிறந்த மன அமைதியினை அடிப்படையாகக் கொண்டுதான் நந் திருவள்ளுவரது 'நாகரிகம்' என்னும் இயல்பு அமைந்துள்ளது.

"பெயக்கண்டும் நஞ்சுண்
டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்."

என்னும் 'கண்ணோட்டம்' என்ற அதிகாரத்துள் காணப்படும் குறள் நாகரிகக் கலைக் கோயிலிற் கோபுரத்தின் உச்சத்தில் அமைத்தற்குரிய பொற்கலசமாகும். ஒருவர் நஞ்சினைக் கொடுக்க அதை உண்டபின்பும், பழித்து ஒன்றுங் கூறாது மனத்தினுள்ளும் ஒரு வித மாறுபாடும் இல்லாமல் அமைதியாக இருப்பவராம் நாகரிகத்தை வேண்டுபவர். இவ்வளவு பொறுமையும், சாந்தமும், மன அமைதியும் உடையவரும் நாகரிகத்தினை வேண்டுபவராம் அங்ஙனமாயின் நாகரிகத்தினை அடைந்தவர் எங்ஙனம் இருப்பரோ? அதனை அவரவர் கற்பனைக்கு விடவேண்டுவதேயாம். இத்தகைய குறளைப் படிக்குங்கால் பொச்சாப்பும், பொறாமையும் நிறைந்து, கள்ளத்தனத்தில் கவனம் செலுத்தி, தன்னலப் பேயைத் தலைவிரித்தாடும்படி செய்து நாகரிகத்தின் பெயரால் அநாகரிகத்தில் அழுந்திக் கிடக்கும் நவீன உலகம் தன் மனச் சான்றுக்கு முன்னர் வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான்.

# அரிது வேட்டனை, நெஞ்சே!

(மா. கோவிந்தராசன்.)

உலகில் உயர்ந்தன யாவும் அரியனவாகவே யுள்ளன, உயர்ந்த பொருளை அடைவதற்கு நாம் உயர்ந்த முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது, இலட்சியங்கள் எவ்வளவு உயர்ந்தனவோ அவ்வளவுக்கு நாமும் முயற்சியில் உயர்வடைந்தாலொழிய அவைகைகூடுவதில்லை தனிப்பட்டவனது நல்ல வாழ்க்கையாகட்டும், நாட்டின் நல்வாழ்வாகட்டும் அவரவர் முயற்சி தகுதிக்கு ஏற்றவாறுதான் அமைகிறது.

உயர்ந்த குறிக்கோளை முன்னிறுத்தி அதனையடைய இடையறாது உழலும் மனித முயற்சிதான் வாழ்க்கையாகிறது; இத்தகைய வாழ்க்கையில் ஏமாற்றங்கள் எத்தனையோ! இன்னல்கள் எவ்வளவோ! சிலருக்கு இந்த ஏமாற்றமே அவர்களின் வாழ்க்கையை முடித்துவிடுகிறது. ஆனால், ஒரு சிலர் ஏமாற்றம் வந்துற்றபோதும், அதனால் மனம் முறிந்துவிடாமல், கொண்ட குறிக்கோளின் மீதும் குறைபடாமல் தம்மிடமுள்ள குறையை ஆராய்கின்றனர். அதன் பயனாய், அக்குறை களைந்து மேலும் பொலிவு பெற்று விளங்குகின்றனர். இத்தகையாரிடத்து, ஏமாற்றமே அவர்தம் முயற்சிக்கு நல்லுரமாகிறது. இத்தகைய உள்ளம் சுடச் சுட வெண்மை தரும் சங்காகும். சிலர் உள்ளமோ அனலிடைப் பட்டதும் கருகிவிடும் புல்லையொக்கும். அத்தகையோர் ஏமாற்றம் ஏற்படின், மனம் முறிந்து, சோகத்திற்கு இரையாகி விடுகின்றனர்.

இக் கருத்துக்களை யெல்லாம் சொல்ல வந்தார் பாணர். அவர் உயர்ந்த கவியன்றோ? சாதாரணமாகவா சொல்லி விடுவார்? இக் கருத்தை, ஒரு சிறு நாடகத்தையே சமைத்துக் காட்டுகிறார். மனிதனின் இலட்சியங்கள், அவன் விழையும் இன்ப உணர்வுகள் யாவற்றுக்கும் ஓர் உருவம் அமைத்து ஒரு தலைவியைப் படைக்கிறார். அந்த இலட்சியத்தை நோக்கி இயங்கும் மனித முயற்சியை உருவகமாக்கி ஒரு தலைவனைப் படைக்கிறார். இருவரையும் அரங்கில் விடுகிறார்.

தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் கண்டு காமுறுகின்றனர். காதலொழுக்கத்தில் ஈடுபட ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்க வேண்டுமென முடிவு செய்துகொள்கின்றனர்.

தலைவன் குறித்த இடத்திற்குப் போய்ச் சேருகின்றான். பகலும், இரவும் சந்திக்கும் நேரம், அச் சந்திப்பில் விளையும் இன்பத்தின் சாயை எங்கும் படிய மாலைக் கால அழகு மனதை மயக்குகிறது. தலைவன் தலைவியின் உயர்ந்த பண்புகளை யெல்லாம் நினைந்து நினைந்து அப் பண்பின் நலனைப் பருகத் துடித்து நிற்கிறான். நேரம் நீள நீள அவன் வேட்கை மிகுகிறது. ஆனால் காதலி வருவதாயில்லை.

---

மனத்தின்கண் மாசிலாத தன்மையை முதலில் அமையப் பெற்று, அதன் மூலம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையினை வளர்த்து அவ்வளர்ச்சியின் பரிணாமமாக நெற்றியில் சுருக்கங் தட்டாமல் நெருப்பை விழுங்கும் நிலைமையை அடைவதுதான் வள்ளுவர் காட்டும் அறநெறி; ஒவ்வொரு மனிதனும் உயர்வதற்கு வேண்டிய வழியை மட்டும் காட்டாமல் வாழ்வு என்று சொல்லும்போதே பிறர் வாழ்வினைக் காட்டு பரம தியாகத்தைச் சுட்டுகின்றது. இந்நெறி இந் நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே கடைப்பிடித்து உய்வதற்குரியது. இந்நிலையில் ஒவ்வொருவரையும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" எனப் பாரதியார் கீதத்தைப் பாடாமல் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தப் பெருந்தகையாரைப் பெற்ற பெருமை தமிழிலக்கியம் உள்ளவரை தமிழகம் எண்ணி மகிழக்கூடியதொன்றும்.

"கண்ணோட்டத் துள்ள
துலகிய லஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை."

—'மூர்த்தி'

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்




**பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53கிடங்குத் தெரு, சென்னை 1.

வருவதாக அவள் சொன்னது அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. எனவே, அவள் மீது பிழையிருக்காது' நாம்தான் குறியிடம் தவறி வந்து விட்டோமோ என ஐயுறுகிறான்.

நீண்ட நேரம் காத்திருந்தும் தலைவி வராது போகவே, அவன் ஐயம் உறுதிப்படுகின்றது. அரிய இன்பம் கைநழுவி விட்டதைப் போன்ற உணர்வு மேலிடுகின்றது. தலைவியின் உயர்ந்த தொடர்பு தனக்குக் கிட்டவில்லையே என, குறியிடம் தவறி வந்த தன் குறையை எண்ணிக் கடிந்துகொள்கிறான். கிடைத்தற்கரிய பேறு கைநழுவி விட்டதால் மேலிட்ட பெருத்த ஏமாற்றம் அவன் மனதைக் கப்பிக் கொள்கிறது. அந்த ஆழ்ந்த சோகத்தினின்றும் ஓர் உயர்ந்த எண்ணம் உள்ளத்தில் முகிழ்க்கிறது. தன் நெஞ்சை விளித்துச் சொல்கிறான் தலைவன்.

"இல்லோன் இன்பம்
காமுற் றாஅங்கு
அரிது வேட்டனையால்
நெஞ்சே! காதலி
நல்லள் ஆகுதல்
அறிந்தாங்கு,
அரியள் ஆகுதல்
அறியா தோயே."

—குறுந்தொகை.

"நெஞ்சே! இல்லாதவன் உலக இன்பத்தைத் துய்க்க விரும்பியது போல், அரிய பொருள் மீது நீ ஆசை கொண்டாய். நம் காதலி நல்லவள் என்பதை நீ அறிந்திருக்கின்றாய்; அப்படியிருந்தும், அவள் அரியவள் என்பதை நீ அறியாது போனது ஏனோ!" என்று தன் நெஞ்சத்திடம் குறைபட்டுக் கொள்கிறான்.

தலைவனுக்கு ஏற்படும் ஏமாற்றம் சங்குக்கு வெண்மையூட்டும் தணலைப் போன்றது. ஏமாற்றத்தால் தலைவன் மனம் முறிந்து விடுவதில்லை. தலைவியின் மீது குறைபடவுமில்லை மாறாகத் தலைவியின் பெருமையும் அருமையும் அவன் மனத் தராசில் உயர்கின்றன. நல்லன யாவும் அரியன எனும் மெய்யுணர்வு ஏற்பட்டு அவன் மனமும் ஒரு படி உயர்கிறது. இக் கவிதையில் தலைவியின் அருமை மட்டும் நமக்குத் தெரிவதல்லாமல், தலைவனின் உயர்ந்த நெஞ்சமும் ஒளி விட்டு நம் நெஞ்சைக் கவர்கிறது.

தலைவிக் கேற்ற தலைவன்தான். இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் அவர்கள் கூடுவர் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

உயர்ந்த கருத்து ஒன்றை உயர்ந்த கவிதை மூலம் சொல்ல விழைந்த பரணரின் முயற்சி உயர்ந்ததாயினும் அரியதாகி விடாமல் அவருக்குக் கைகூடி விட்டது, சிறந்த முறையில். ஏனெனில், அவரும் அந்த உயர்ந்த முயற்சிக்கேற்ற தகுதியுடையவர் அன்றோ? இல்லாவிடில் எங்ஙனம் நமக்கு இந்த உயர்ந்தகவிதை கிடைத்திருக்கும்?

# நான் யார்?

நான் எப்போது பிறந்தேனோ யாருக்குப் பிறந்தேனோ, எப்படிப் பிறந்தேனோ, எதற்காகப் பிறந்தேனோ நான் அறியேன். மற்றெவரும் அறியார். நான் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து கொண்டே இருக்கிறேன். மிகப் பழங்காலத்தில் அரசர்கள் எல்லோரும் என் மீது காதல் கொண்டு, எனக்காகப் பொன்னும் மணியும் வாரி வழங்கித் தங்களுக்கு என்மீது இருந்த அன்பை மக்கள் எல்லோரும் இன்றுவரை உணருமாறு தெளிவுபடுத்தினார்கள். பண்டைக் காலத்தில் எனக்காக ஆயிரமாயிரம் இளங்காளைகள் தம் தாய்தந்தையரை விட்டுப்பிரிந்து, சோறும் நீரும் துறந்து, ஊரும் வீடும் நீங்கி என்னையே பின்தொடர்ந்து வரலானார்கள். அவ்வாறு மக்களாலும் மன்னர்களாலும் மிகவும் உவந்து வளர்க்கப்பட்டு, உயர்ந்த நிலையில் வீற்றிருந்த என்னுடைய வாழ்க்கையை வர்ணிக்க என்னால் இயலாது. அந்தக் காலத்துச் சான்றோர்களுக்கு என்னைப் போற்றி, வளர்த்துக் காத்தலே கடமையாக இருந்து வந்தது. வேந்தர்கள் என் வளர்ச்சிக்காக உவந்தளித்த நிலங்களை நம்பியே சான்றோர்கள் என்னுடன் சேர்ந்து மிகவும் இன்பமான நல்வாழ்வு நடத்திவந்தார்கள்.

அக்காலத்துச் செல்வச் சீமான்கள், என் பெயரில் தேவாலயங்கள், மடங்கள் மற்றும் பார்ப்பனச் சேரிகள் முதலியவற்றை இனாமாகக் கட்டிக் கொடுத்து உதவி செய்தார்கள். நான் அச்சமயத்தில் என்னுடைய உயர்வின் உச்ச நிலையை நினைந்து நினைந்து, ஆணவங் கொண்டு பால்போல் பொங்கினேன்· ஆனால் பொங்கிய பால் அடுப்பில் போகும் என்பதை முற்றும் மறந்தேன்.

இவ்வாறு என்னுடைய வாழ்க்கை, வளனும் வனப்பும் மிகுந்து கடந்து செல்ல, ஒரு சுக்கில பட்ச முழுமதி நாளன்று அப்போதே அலர்ந்த மல்லிகைப் பூப்போன்று, நிலா மாசு மறுவின்றித் தன் தூய ஒளியுடன் விளங்கிற்று. அதனைக் கண்ட கடல் பொங்கியது. தன் காதலியாகிய அலையரசியோடு விளையாடா நின்றது. நானோ கடற்கரையோரத்

திலிருந்த ஒரு தேவாலயப் பலி பீடத்தே படுத்து மெய்ம்மறந்து இன்துயிலுள் ஆழ்ந்தேன். அவ்வமைதியான நேரத்தில் என்னுடைய ஆன்மா என் உடலை விட்டுப் பிரிந்து என்னைப் பார்த்துக் கொண்டே சிந்தித்து, என்னை ஒரு அனாதையாகத் துறந்து புறப்பட்டுச் செல்வதைக் கண்ணுற்றேன். அது எங்கே போகிறதென்று கருத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன்' எனது ஆன்மா அவ்வாறு வகுத்து செல்லாநிற்க, சில மூடர்கள், தம் குற்றங்குறைகளை உணராது, என்னுடைய ஆன்மாவின் நட்புக்காக அரிதின் முயன்று பாடுபட்டு இறுதியில் என்னுடைய பீடு, பெருமை, புகழ் ஆகிய எல்லாவற்றையும் யாய்க்கத் தொடங்கினார்கள். அவர்கள் என்னுடைய நட்பைக் கொண்டு, தங்கள் பெருமையைப் பெருக்கிக் கொள்ள முயற்சி செய்தார்களேயன்றி என்னுடைய ஏழ்மை நிலையைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. தன்னல வாதிகளாகவும், சுய தேவையை மட்டுமே செய்து முடிப்பவர்களாயும் என் மீது எல்லா உரிமையும் உண்டு என்ற ஆணவத்தோடு என்னுடைய பெருமையைக் குழி தோண்டிப் புதைக்கலானார்கள்.

வருணனை– விளக்கம்– வேண்டாத இடத்தில் மிகுதியாக வருணித்தும், மூன்றடியாலும் இரண்டடியாலும் பாட்டுக்கள் பாடியும் தற்குறிப் பேற்றத்தால், என்னைப் பலவாறு இகழ்ந்து கூறியும் இன்னல் விளைத்தும் என் புகழ் மங்குவதற்கு வழி கோலினர். இவை யெல்லாவற்றையும் கண்டு என்னுடைய ஆன்மா மறுபடியும் என்னையே வந்தடைந்தது. உடனே நான் மருண்டெழுந்து உற்று நோக்கி அவ்வளவு நேரம் கண்ட—காட்சி—நாடகம்–எல்லாம் கனவு என்பதை உணர்ந்தேன். எக்காலத்தும் அவ்வாறு நிகழாது என்று என் மனம் ஆறுதலடையும்படி செய்ய நான் பலமுறை என்னை நானே தேற்றிக் கொண்டேன்— என்றாலும் பயனில்லாமற் போயிற்று.

முது செம் பெண்டிர் தம் நெற்றியில் திகழும் சிவந்த, ஒளி மிக்க குங்குமத் திலகம் போன்று விளங்கும் செங்கதிர்ச் செல்வனை வணங்கி, என் வருங்கால வாழ்வைப் பற்றிச் சிந்தனையிலாழ்ந்து, மாறுபட்ட மனத்தோடு நடக்கலானேன். அவ்வாறு கற்பனை உலகத்தில் மூழ்கி நடந்து சென்றுகொண்டிருந்த என்னை, ஏளனம் செய்வதைப் போன்று ஒரு இளைஞன், "கனவு நினைவாயிற்று" என்று பாடிக்கொண்டு சென்றான். எங்குபார்த்தாலும் என்னைத் துன்புறுத்துகின்றவர்களே யன்றி ஆதரிப்பவர்கள் எவரும் கண்ணுக்கெட்டிய தொலைவில் காணப்படவில்லை.

இவ்வளவு பொறுமையோடு என் வாழ்க்கை வரலாற்றைக் கேட்ட நீங்கள் தவறாமல் என்னுடைய வேண்டுகோளையும் நிறைவேற்றி வைப்பீர்களென்று நான் நம்புகிறேன். நீங்கள் எல்லோரும் புலமை அடைய வேண்டும் என்று உங்களுக்குத் தொண்டு செய்வதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டு; ஆனால் நான் வேண்டுவதும் ஒன்று உண்டு. நீங்கள் என்னைப் போற்றிவளர்த்துப்பண்டை நாள் போன்று அரியாசனத்தில் ஏற்றி வைக்கப் பாடுபடா விட்டாலும், என்னுடைய பண்டைப் பெருமையை மறந்து, எள்ளி நகையாடி இழிநிலைப்படுத்தாதிருக்க வேண்டுமென்பதேயாம். நீங்கள் இலக்கணத்தில் முதிர்ந்த தேர்ச்சி பெற்ற பிறகு, செய்யுள் செய்வதற்கு முயற்சி செய்வதுதான் சிறப்புடைத்தாகும்; கருதிய பயனையும் அளிக்கும். 'அ' என்னும் முதலெழுத்தை அரைகுறையாகக் கற்றதும், ஆராய்ச்சியில் இறங்கி, என்னை அலக்கழிப்பது சீருடைத்தாகாது-பெரும் பிழையுமாகும்.

'நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ,
நெறியுமா ரதுவே."

புறம்: 195.

R C. நாராயணசாமி.
B A, (Hons)

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லியைக் குறிக்கும்போதெல்லாம் தாய் என்றே குறித்தலும் இக்கருத்துக்கு அரண் செய்வதாகும்.

கடுஞ்சொற் கூறி இற்செறித்தல் தலைவி தலைவனோடு தொடர்பு கொண்டிருத்தலைக்கேட்ட. அல்லது கண்ட நிலையில் செவிலி வன்மையாகக் கண்டித்துத் தலைவியை வெளியே செல்லாதவாறு வீட்டிலேயே இருக்கச் செய்தல் போன்ற துறைகளும் இக்கருத்தை நிலைநாட்டத் துணை புரிவனவாம்.

இக் கூறியவாற்றான் 'செவிலி' என்பவள் இக்காலத்து 'ஆயா' வல்லள் என்பதும் தோழியின் தாயாகவும் நற்றாயின் தோழியாகவும் அமைவதேயன்றி வேறு பல் வகைகளிலும் அமைவதுண்டு என்பதும் அவளே மக்கட்பேறு வாய்க்கப் பெறாதவளாதலும் கூடுமென்பதாம்; பருவத்தால் நற்றாயை ஒருவாறு ஒத்தவள் என்பதும் பெறப்படும்.

# அகப்பொருளிலக்கியங்களில் செவிலி

(மணி)

செவிலி!

'செவிலி' என்னும் சொல் வளர்ப்புத்தாய் என்னும் பொருளில் வழங்கும். வள்ளுவரும் "அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும் செல்வச் செவிலியால் உண்டு" என்றிசைத்து 'செவிலி' என்னும் சொல்லை விளக்குவார்.

தலைவியைக் குழந்தைப் பருவந் தொட்டே வளர்த்து வருபவள் செவிலி. இக் கருத்து, தலைவி தன் வீடு நீங்கித் தலைவனுடன் யாருக்கும் தெரியாமல் சென்று விட்டாள் என்று அறிந்த செவிலி தோழியிடமும் அயலாரிடமும் பிரிவாற்றாது இரங்கிக் கூறுவதாக அமைந்த பாலைத்திணைப் பாடல்களால் நன்கு விளக்கப்படும். இத் துறையினைப் புலவராயினோர் 'மகட் போக்கிய செவிலி கூறியது' என்று கூறுவர்.

ஆயாவா?

தலைவியை இளமைப் பருவந் தொட்டே வளர்த்து வருபவள் செவிலி என்று கூறியதும் இந்நாளில் பெருஞ் செல்வர் இல்லங்களில் குழந்தைகளை வளர்த்து வர அமர்த்தப்படும் ஆயாவை நினைத்துக்கொள்ளக் கூடாது. 'ஆயா' என்பவள் கூலிக்குக் குழந்தை வளர்ப்பவள்.' செவிலி'யோ அவ்வாறன்றி அகத்தெழுந்த உணர்ச்சியினால் உந்தப்பட்டுக் குழந்தையைப் போற்றிக் காத்து வருபவளாவள். 'ஆயா'வுக்கு உரிமை கிடையாது; செவிலி உரிமை மிக்கவள். பெற்ற தாய் இடும் கட்டளைக்கேற்ப 'ஆயா'தொழில் படுவாள். தாய்போன்றே தலைவியின் நலத்துக்கான எதையும் முழு உரிமையுடன் செய்யும் வன்மை படைத்தவள் 'செவிலி'; சுருங்கக் கூறின், ஆயா ஒரு பணிப் பெண், செவிலி நற்றாயின் மற்றோர் படிவம்.

செவிலி நற்றாயின் தோழி என்று இலக்கண நூலார் இசைப்பதும் இக் கருத்தையே நன்கு வலியுறுத்தும்.

தோழியின் தாய்;

'தோழிதானே செவிலியது மகளே' என்று கூறுவதால் செவிலி தோழியின் தாய் என்பது பெறப்படும். ஆனால் இக் கருத்து முற்றிலும் பொருந்துவதாகாது. அதாவது எல்லா விடங்களிலும் தோழியின் தாயே செவிலியாக அமைவாள் என்பது ஒவ்வாது என்பதாம். சில குடும்பங்களில் தோழியின் தாயே செவிலியாதலும் உண்டு, வேறு சில இடங்களில் வேறு வகையாகச் செவிலி அமைதலும் உண்டு என்பதை மறுக்கவியலாது. என்னை? செவிலியின் மகளே தோழியாதல் வேண்டும் என்ற வரையறையில்லையாகலின் என்பது.

செவிலி யார்?

அங்ஙனமாயின் வேறு வகையால் செவிலி அமையுமாறு எங்ஙனம் என்ற வினாவுக்கு விடை காண வேண்டும்.

குழந்தைப்பேறு வாய்க்கப் பெறாத சிலர் தங்கள் பக்கத்து வீட்டுக் குழந்தைகளையே, எதிர் வீட்டுக் குழந்தைகளையே தம் குழந்தைகளைப் போலக் கருதுவது, அவற்றோடு பேசிக் கொஞ்சி மகிழ்வதும், அவைகளை எடுத்துப் போற்றி வளர்த்து வருவதும் இன்னும் சிற்றூர்களில் காணும் பெரும் வழக்காகவே அமைந்திருக்கக் காணலாம். இது ஒருவகை.

அவ்வண்ணமே ஒருவன் தனக்குக் குழந்தைப்பேறில்லையெனின் தன் தம்பி, தமக்கை, தங்கை, சுற்றத்தார் ஆகிய இவருள் ஒருவர் குழந்தையை எடுத்து வருதலும் பாலை வழக்கே. இந்நிலையில் அவனுடைய மனைவி அக் குழந்தைக்குச் செவிலியாக அமைவாள். அவளே அக் குழந்தையின் கல்வி, திருமணம் ஆகியவற்றிற்கான செயல்களைப் புரிவதையும் காணலாம். இது மற்றோர் வகை.

பின்னுமோர் வகையிலும் செவிலி அமைவாள். ஒரே வீட்டில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் வாழும் நகரங்களில் ஒரு குடும்பத்தின் குழந்தை மற்றோர் குடும்பத்தில் மாறி வளர்வதுமுண்டு. இந்நிலையில் குழந்தை வளர்ந்துவரும் குடும்பத் தலைவி செவிலியாக அமைவாள். இத்தகைய சூழலில் வேற்று மொழி பேசுகின்ற செவிலியாயும் அமைதல் இயற்கையே.

பருவம்:

செவிலி தோழியின் தாயாயினும் அல்லது நற்றாயின் தோழியாயினும் அல்லது மேலே சொன்னவாறு அமையினும் அவள் நற்றாயை ஒத்த அகவை (வயது)பினளாகவோ சில வாண்டுகள் இளையவளாகவோ, மூத்தவளாகவோ இருத்தல் வேண்டும். செவிலி கூற்றாக நடக்கும் பாடல்கள் அனைத்தும் தாயின் உணர்ச்சிகளே படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்திருப்பதும் இக் கூற்றை மேலும் வலியுறுத்துவதாகும். தோழி தலைவி ஆகிய இருவரும். செவி

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# மன்மத ஆண்டு

சென்னை பூக்கடை மல்லீஸ்வரர் ஆலயத்தில், மன்மத ஆண்டு பிறப்பு விழா, திருப்புகழ்மணி அவர்கள் தலைமையில் சிறப்பாக நிகழ்ந்தது. அப்போது சேதுபிள்ளையவர்களும் இரசபதியவர்களும் பேசினர். கடைசியாக நம் ஆசிரியாடிகளார் மன்மத புத்தாண்டில் மன்பதைக்கே புத்தறிவு கிளைத்தக்க வகையில் அறிவார்ந்த விரிவுரை நிகழ்த்தினார்கள். அதன் சுருக்கம்:—

"மன்மத புத்தாண்டு" விழா கொண்டாடும் அடியார் திருக்கூட்டத்தில் பேசும் வாய்ப்பு பெற்றதைப் பற்றி மகிழ்ச்சி. ஆண்டவனைச் சார்ந்தவர்கள் அனைத்தும் பெறுவர். அவனையே அடைக்கலமாகக் கொண்டு அவனையே நினைந்து உணர்ந்து நெகிழ்த்துருகும் அடியார்கட்கு அவன் தன்னையே வழங்குவான். அறிவு ஆராய்ச்சிகளால் அவனை அடைய முற்பட்டால் எட்டமாட்டான். அதனால் அவனுக்காக உருக உருக அவனை அடையலாம்.

தென்பாண்டி நாட்டுப் பெரியவர் (சேதுபிள்ளை அவர்கள்) "சென்னையில் பால்காரர்கள் தோற்கன்றை வைத்துக் கொண்டு பால் கறக்கும் கன்றாவியைக் காண்கின்றோம்; கன்றாவி என்றால் கன்றுக்குட்டியின் ஆவி" யெனப் பொருள்கூறி அழகுற ஓர் சொற் சித்திரம் தந்தார். அப்படியே அடியேனும் மன்மத ஆண்டு பற்றி ஒரு பொருள் தர எண்ணுகின்றேன்.

'மன்மதம் என்றால் மனம் மதம் கொள்ளுதல், தடிப்புத் தனிமை பெறுதல்; ஆண்டு' என்பது 365 நாட்களின் ஓர்கால வரையறை. பண்டங்களை மொத்தமாக வாங்கி உபயோகித்தால் ஆண்டு வரும் என்பர். அப்போது 'ஆண்டு' என்பது ஆள்வது, ஆட்சி செய்வது; நன்றாய்த் தொடர்ந்து பயன்பட்டு வருவது எனப் பொருள் படும். அதனால் செய்வனே பயன் கொள்ள வேண்டுமென்னும் கருத்தில்தான் 'ஆண்டு' எனப் பெயர் அமைத்திருப்பர் நம் பண்டைச் சான்றோர்கள்.

மனம் உடையவர்கள் மனிதர்கள். (வாய் படைத்தவர் வாயர் காயம் படைத்தவர் காயத்தர் என்றும் சொல்லுவதில்லை) வாய், காயம் என்பவைவிட மனம்தான் சிறந்தது. மன்பதை என்றால் சமுதாயம். "சிந்தையீர்! உமக்கொன்று சொல்லக் கேண்மின்!" என்று விளக்கினார் அப்பரடிகளார். அதனால் மனத்தால் சிந்திக்கும் வலிமை பெற்றவர்கள் மனிதகள் நாம் சிந்திக்கவே, மனத்தை அளவாய் ஆளவே, ஆண்டுக் கொள்ளவே, தோன்றினோம். உடம்பின் சக்தி இருக்கவேண்டிய அளவுக்கு மேலாகப் போனால் உடம்பு மதம் கொள்ளும், கொழுப்பேறும், தடிப்புத் தன்மையுண்டாகும், அப்படியே சிலவேளைகளில் மனதின் நிலை இருக்கவேண்டிய அளவு மீறி வேறுவகையில் மதம் கொள்ள, அந்த மன்மதம் கட்டுக்கு அடங்காமல் செய்யத்தகாதனவெல்லாம் செய்ய முற்படும்.

நம் வாணாளை வீணாளாக்கக் கூடாது. ஒவ்வொரு நாளையும் நல்ல பயனுள்ள நாளாக, விரும்பும் நாளாக ஆளவேண்டும், இந்தமன்மத ஆண்டில்ஒவ்வொரு நாளையும், நம் மனம் மதம் கொள்ளாமல் ஜாக்கிறதையாயிருந்து தடுத்துக் காத்து, சீரிய செம்மை நெறி நின்று, செவ்வனே பயன் கொள்ள வேண்டும். படிப்பு பட்டம் பதவி, செல்வம், சீர், சிறப்பு எந்த நிலைகளிலும் உடம்புக்கும் மனத்துக்கும் தடிப்புப் பற்றா வண்ணம், அளவாய் வைத்துக்கொண்டு ஒழுக வேண்டும். அப்படிமனதை சரியாக ஆளாவிட்டால் என்னைப் போல் உருவம் அழிந்து விடுவாய், 'என் கதியைப்பார்' என்று மனித குலத்துக்கே அறிவுறுத்துகின்றான் மன்மதன் "நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்பதை மறந்தேன் இறைவன்பால் என் தீய ஆற்றலைச் செலுத்தினேன், அழிந்து பட்டேன்; வடிவமிழந்தேன்; மனத்தை வாக்கை, உடம்பைச் சரியாய் ஆண்டு பயன் கொள்ளுங்கள்" என்கிறான் அநங்கன் இம்மன்மத ஆண்டில்.

நல்லமனம் நல்ல வாக்கு, நல்ல செயலோடிருக்க வேண்டும். மனம் சரியாயிருக்க வாக்கும் உடம்பும் சரியாயிருக்கும் 'உண்மை' என்பது உள்ளத்தில் விளங்க வேண்டிய சத்தியத் தன்மை; வாக்கில் விளங்க வேண்டிய சத்தியத் தன்மை வாய்மை; மெய்யில் விளங்க வேண்டிய சத்தியத் தன்மை மெய்ம்மை. மனம், வாக்கு, காயம் மூன்றிலுமே ஒரே சத்தியப் பொருள் விளங்க வேண்டுமென்று ஒரு சொல்லையே உண்மை, வாய்மை, மெய்ம்மை என அமைத்தது, நினைப்பு வேறு, சொல்வேறு செயல் வேறென்றில்லாமல் மூன்றும் ஒத்து வேலை செய்ய வேண்டுமென்பதற்குச் சொற்களே சாட்சி. அப்போது உள்ளம் கெடு நினைப்புகள் கொள்ளாமல் உயர்ந்த எண்ணங்களில் பழகி, உயர்ந்த பொருளாகிய இறைவனைச் சார்ந்து நிற்க,

வாக்கில் வருவனவெல்லாம் வாய்மையாயும், மெய்யால் செய்வனவெல்லாம் மெய்ம்மையாகியும், சத்திய நெறியில் வாழ்க்கை செல்லும்.

திருவள்ளுவப் பெருமான் எல்லோருக்கும் ஆனவர். அவர் "உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்" என்கிறார். உண்மையாயிருந்து எப்போதும் எதிலும் உயர்ந்ததைப் பற்றியே நினைக்க வேண்டுமென்கிறார். 'படிப்பு' என்றால் கடைசி வரை படிப்பது; எழுதுவதென்றால் அழகாய் செம்மையாய் எழுதுவது; எந்த வேலையிலும் உயர்ந்து உச்ச நிலை யடைய முற்படுவது. இல்லாவிட்டால் அரைகுறை மனிதர்கள். அவர்களை அவர் மனித குலத்திலும் விலங்கினத்திலும் கூட சேர்க்க இசையாமல் "மரமக்கள்", என்கிறார்! மனிதராய்ப் பிறந்து உயர்ந்ததை பெறாதவர்கள் மனிதவடிவிலிருந்தாலும் மரம்தான் என்கிறார்! பெரிய பட்டம், பெரிய பதவி, பெரிய செல்வம் படைத்துப் பெருங்காரியங்கள் செய்தவர்கள் என்று பறைசாற்றிக் கொண்டாலும், உள்ளம் உயர்ந்ததைப் பற்றாது, உயர்ந்ததை அறிந்து கொள்ளும் ஆற்றலில்லாத போது மரம்தான் என அழுத்தமாகச் சொல்கிறார்.

உயர்ந்தது எது? அழிந்து போவதை உயர்ந்ததெனச் சொல்லமுடியுமா? இன்றிருந்து நாளை மாய்வது உயர்ந்ததாகுமா? என்றும் அழியாததொன்றே உயர்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலானதாய், என்றும் உள்ளதாய், எல்லா சக்திகளையும் மிஞ்சிய அதிநுட்பமான ஆற்றல்வாய்ந்ததாயிருக்க வேண்டும். அதோடு எல்லோருக்கும் உபகாரமாயிருக்க வேண்டும். நயன், நயம் என்பதே, (நாயனா என்றால் நாட்டில் உபகாரியாயிருப்பவர்.) அப்படி அழியாமல் உயர்ந்ததாய் நுட்பமாய் எல்லாருக்கும் உதவியாயிருப்பது எது? அடியார் என்போமா? அந்த அடியாருக்கும் அந்த நிலை கொடுத்தது எது? "ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே, உலகனைத்தும் ஒன்றுமே" எனும் சிவவாக்கியர் பாடலைத் திருப்புகழ் மணியவர்கள் அடிக்கடி பாடுவார்கள். அப்படி எல்லாம் ஒன்றி ஒன்றாயுள்ளது ஓர் பெரிய பொருள்தான்; அதே கடவுள். மனம் செய்ய வேண்டுவது அந்த பெரிய பொருளை பற்றுதலே. அப்படி செய்யாது போனால் மனம் மதம் பிடித்தும், வாய் அல்லாதன பேசியும், மெய் தீச்செயல்களையும் செய்யும். அதனால் "உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்" வேண்டும்.

எப்படி அந்த பெரிய பொருளாகிய இறைவனை பிடிப்பது? அவர் மனோ வாக்குக் காயங்களுக்கு அதீதமானவர். உள்ளும் புறம்புமுள்ள கருவிகரணங்களுக்கும் எட்டாதவர். மனம் அடங்கி அது செய்ய வேண்டுவன வெல்லாம் செய்து முடிந்த நிலையில், அவனருளாலே ஞானமாகிய தெளிவு வர, பின்னர் அவர் எட்டப்படுவார். உண்மை, இரக்கம், அருள், கருணை, ஞானம் முதலிய உயர் பண்புகள் எதிலும் உச்ச நிலைக்குத்தான் 'திருவடி' என்பது. அதைத்தான் திருநாவுக்கரசர் "அரவணையான் சிந்தித்தாற்றும் அடி" எனத் தொடங்கும் பதிகத்தில் மிக அற்புதமாகப் போற்றி அருளியுள்ளார். திருவடி நிலை என்றால் மிகத் தூய நிலை. ஆண்டவன் என்று எடுத்துக் கொண்டால் ஆண்டவன் தன்மைகளில் மிக உச்சத் தன்மை திருவடி. அதனால் ஞானத்தில் ஞானம், தூயதில் தூய்மை, நன்மையில் நன்மை, அருளில் அருள், குறிப்பில் குறிப்பு. எதிலும் உச்சமானது திருவடி. அதுவே உருவம் அருவம் அருஉருவ வழிபாடுமாம். தேறலின் தெளிவாகிய பதிஞானத்தினாலே கருவிகளெல்லாம் அடங்கித் தன்னை மறந்த நிலையில் இறைவன் உணரப்படுவான். அதைத்தான் ஞானத்தால் வீடு என்பது.

ஞானத்தில் ஞானியாகிய மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் திருவடியைப் பெற்று திருக்கழுக்குன்றில் நாம் உய்ய வேண்டி வைத்தார். திருப்பெருந்துறை மூலத்தானத்தில் திருவடிதான் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு சோழ நாட்டு யாத்திரையின் போது குருகுலத்தார் திருப்பெருந்துறைக்கும் சென்று வணங்கி இறைவன் திருவடிகளை உள்ளக் கமலங்களில் ஏற்று அப்படியே திருக்கழுக்குன்றிற்கு வந்து அங்கு திருவடிக் கோயில் அமைக்க அஸ்திவாரக்கல் நாட்ட, ஏற்பாடு செய்துள்ளனர். இந்த ஆண்டு மே மாதம் 2-ம் தேதி யாத்திரை புறப்பாடும், ஜூன் மாதம் 2-ம் தேதி திருக்கழுக்குன்றில் கல்நாட்டு விழாவும் செய்வதென அமைத்திருக்கின்றனர். இத்திருவடிக் கோயில் அமைப்பிற்காக வேண்டுவன அனைத்தும் திருவருள் கூட்டும்! இத்தகைய வாய்ப்பினைத் தரும் இம்மன்மத ஆண்டு சிறந்த ஆண்டுதான் என முடித்தார்.

—o—

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்: மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)